**கூடுதல் மகளிர் நீதிமன்றம் (நீ.ந.நிலை), தேனி.**

**முன்னிலை : செல்வி. D. ஜெயபாரதி, L.L.M.,**
நீதித்துறை நடுவர்,

கூடுதல் மகளிர் நீதிமன்றம் (நீ.ந.நிலை), தேனி.

2058 திருவள்ளுவர் ஆண்டு ஸ்ரீபராபவ வருடம் ஆடி மாதம் 07–ம் நாள்

2026–ம் ஆண்டு ஜுலை மாதம் 23–ம் நாள் வியாழக் கிழமை

**STC 75/2026**
**in**
**DVC No.8 / 2024**

**CNR No. TNTH02-006-497-2025**

| | | | |
|---|---|---|---|
| 1. | சுருக்கு விசாரணை வழக்கு எண் | : | 75/2026 |
| 2. | வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்ட எண் | : | TNTH02-006-497-2025 |
| 3. | புகார்தாரர் | : | S.பிரபா, 25/25.<br>த.பெ.செல்வராஜ்,<br>145, தெற்குத் தெரு,<br>டொம்புச்சேரி,<br>போடிநாயக்கனூர் தாலுகா,<br>தேனி மாவட்டம். |
| 4. | சட்டப்பிரிவு | : | 31 of DV Act. |
| 5. | குற்றம் சாட்டப்பட்டவர் பெயர்,<br>வயது, தந்தைப்பெயர் மற்றும் முகவரி | : | M.அஜித்குமார், 28/25.<br>த.பெ.முருகதாஸ்,<br>16/20C,நடுத்தெரு,<br>சந்தைப்பேட்டை தெரு,<br>பெரியாண்டவர்புரம்,<br>போடிநாயக்கனூர் டவுன், தாலுகா,<br>தேனி மாவட்டம். |
| 6. | தீர்ப்புரை பகரப்பட்ட நாள் | : | 23.07.2026 |
| 7. | நீதிமன்றத்தின் தீர்மானம் | : | எதிரி மீதான குற்றச்சாட்டு புகார்தாரர் தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும். எனவே |

JAYABHARATHI DURAI

Signed by
Digitally signed by JAYABHARATHI DURAI
Date: 2026.07.23 19:07:21 +0530

| | | | |
|---|---|---|---|
| | | | எதிரி பிரிவு 31 குடும்ப வன்முறையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டத்தின் கீழ் குற்றவாளி என இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது. |
| 8. | தீர்ப்பும் தண்டனையும் | : | முடிவாக, எதிரிக்கு பிரிவு 31 குடும்ப வன்முறையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டம் 2005–ன் கீழ் 5 மாதம் மெய்காவல் சிறை தண்டனையும், ரூ.2,000/– அபராதமும், அபராத தொகை செலுத்த தவறினால் மேலும், 1 மாதம் மெய்காவல் சிறை தண்டனையும் வழங்கி 278(2) of BNSS பிரிவின் கீழ் உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது. அபராதத் தொகையை புகார்தாரருக்கு 395(3) of BNSS பிரிவின் படி இழப்பீடாக வழங்கவும் உத்தரவிடப்படுகிறது. |

இவ்வழக்கானது 16.10.2025–ம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.தண்டபாணி அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் / எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.வேலுச்சாமி அவர்கள் ஆஜராகியும், சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும் இறுதியாக இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும் இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த, இந்த வழக்கில், இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்....

## தீர்ப்புரை

### 1. மனுதாரர் / புகார்தாரர் தரப்பு வழக்கு சுருக்கம்:

1–ம் மனுதாரர், எதிர்மனுதாரருக்கு எதிராக DV 8/2024 என்ற அசல் மனுவினை தாக்கல் செய்திருப்பதாகவும், மேற்படி மனுவில் இடைக்கால ஜீவனாம்சம் கோரி Crl.MP.No.3671/2024 என்ற மனுவினை தாக்கல் செய்திருந்ததாகவும், மேற்படி மனுவில் 1–ம் மனுதாரருக்கு மாதம் ரூ.3,000/–மும், 2–ம் மைனர் மனுதாரருக்கு மாதம்

JAYABHARATHI DURAI
Signed by
Digitally signed by JAYABHARATHI DURAI
Date: 2026.07.23 19:07:29 +0530

ரூ.2,000/-மும் ஆக மொத்தம் மாதம் ரூ.5,000/-த்தை பிரதி மாதம் 5-ம் தேதிக்குள் செலுத்துமாறு Crl.MP.No.3671/2024 மனு தாக்கல் செய்த தேதியான 22.04.2024-ம் தேதியிலிருந்து செலுத்தும்படி கடந்த 23.07.2025-ம் தேதி உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது என்றும், அதன் படி எதிர்மனுதாரர் 1-ம் மனுதாரருக்கு நிலுவைத் தொகையாக ரூ.85,000/- செலுத்த வேண்டியுள்ளது என்றும், எதிர்மனுதாரரின் குடும்பத்திற்கு கேரளா மாநிலத்தில் சொந்தமாக 2 ஏக்கர் ஏலத்தோட்டம் உள்ளது என்றும், அதில் விவசாயம் செய்து நல்ல வருமானம் ஈட்டி வருகிறார்கள் என்றும், எதிர்மனுதாரர் தற்போது வரை வேண்டுமென்றே மேற்படி உத்தரவை நிறைவேற்ற மறுத்து எந்தத் தொகையும் எதிர்மனுதாரர்/எதிரி செலுத்தி வைக்கவில்லை என்றும், எனவே, எதிரி மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறு மனு தாக்கல் செய்துள்ளார்.

2. <u>எதிர்மனுதாரர் / எதிரி தரப்பு விவாத உரையின் சுருக்கம்.</u>

எதிர்மனுதாரர் எப்போதும் நீதிமன்ற உத்தரவை மதித்து நடப்பவர் என்றும், 1-ம் மனுதாரர் மேற்படி இடைக்கால ஜீவனாம்ச மனுவில் வேலைக்கு சென்று வருமானம் ஈட்டவில்லை என்று பொய்யான தகவலை சொத்துக்கள் மற்றும் பொறுப்புறுதி ஆவணத்தில் குறிப்பிட்டுவிட்டு, மாறாக, இவ்வழக்கு குறுக்கு விசாரணையின்போது பள்ளி ஆசிரியராக வேலை பார்த்து மாதம் ரூ.6,000/- சம்பளம் பெறுவதாக கூறியுள்ளார் என்றும், எதிர்மனுதாரரின் சம்பளமும் மாதம் ரூ.6,000/- என்று எ.ம.சா.ஆ.1 தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், கணவன் - மனைவி இருவரும் சமமாக வருமானம் பெற்றால் கணவனிடமிருந்து மனைவி ஜீவனாம்சம் கோர முடியாது என்று மாண்பமை உயர்நீதிமன்ற மற்றும் உச்ச நீதிமன்ற முன் தீர்ப்புகளில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது என்றும், எதிர்மனுதாரர் சட்டத்தின் பிடியிலிருந்து தப்பிக்க நினைப்பவரல்ல என்றும், எதிர்மனுதாரர் சட்டக்கல்லூரி மாணவராக உள்ளதாலும், பகுதி நேரமாக வேலை பார்ப்பதாலும், குறைந்த வருமானத்தில் தனது வயதான பெற்றோர்களையும் பராமரிக்கும் கடமையில் உள்ளதாலும், இதுநாள் வரை தன்னால் இயன்றளவு மனுதாரர்களுக்கு பொருளுதவி செய்துள்ளார் என்றும், மனுதாரர்கள் சொந்த வீட்டில் வசிப்பதாக சாட்சியமளித்துள்ளார் என்றும், எதிர்மனுதாரருக்கு சொந்த வீடு கிடையாது என்றும், எதிர்மனுதாரருக்கு

JAYABHARATHI DURAI
Signed by
Digitally signed by JAYABHARATHI DURAI
Date: 2026.07.23 19:07:37 +0530

நிரந்தர வேலை கிடைத்தவுடன் அதிகமான பொருளுதவி செய்ய தயாராக இருப்பதாகவும், எனவே, இவ்வழக்கினை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

**3.** மனுதாரர் தரப்பில் மனுதாரர் பிரபா ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு ம.சா.ஆ.1 சான்றாவணமும், எதிர்மனுதாரர் தரப்பில் எதிர்மனுதாரர் அஜித்குமார் எ.ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, எ.ம.சா.ஆ.1 முதல் எ.ம.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**4.** எதிர்மனுதாரருக்கு எதிராக உள்ள மனுதாரர் தரப்பு சாட்சியங்கள் குறித்து எதிர்மனுதாரரிடம் கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் கேள்வி கேட்ட போது, பொய் வழக்கு என்று கூறினார்.

**5. <u>இரு தரப்பு வாதம் –</u>**

மனுதாரர் தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் மனுதாரர் மைனர் குழந்தையை வைத்துக் கொண்டு மிகவும் கஷ்ட ஜீவனம் செய்து வருவதாகவும் ஆனால் மனுதாரர் வேண்டுமென்றே மனுதாரரரையும் அவரது குழந்தைகளையும் பராமரிக்காமல் தவிர்த்து வருவதாகவும் எனவே எதிரி மீது தகுந்த நடவடிக்கை எடுக்கும் படி வழக்கறிஞர் வாதிட்டார்.

**6.** இவ்வழக்கில் எதிரி தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில் எதிரி சட்டப்படிப்பு படித்து வருவதாகவும், கிடைக்கும் கூலி வேலைகளை பார்த்து அவரது பெற்றோரையும் பார்த்துக்கொண்டு படித்து வருவதாகவும், கிடைக்கும் பணத்தினை அவ்வப்போது மனுதாரருக்கு கொடுத்து வருவதாகவும், மனுதாரர் தன்னை பராமரித்துக் கொள்ளும் நிலையில் இருக்கிறார் என்றும், எதிரி வேண்டும் என்றே பணம் கட்ட தவிர்க்கவில்லை என்றும் அவரிடம் அதற்கான வசதி வாய்ப்பு இல்லை என்றும் வாதிடப்பட்டது.

**7. <u>இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய சங்கதிகள்</u>:**

(1) இவ்வழக்கில் எதிரி மீதான குற்றச்சாட்டு மனுதாரர் / புகார்தாரர் தரப்பில் தகுநிலை ஐயப்பாட்டிற்கப்பால் நிரூபிக்கப்பட்டுள்ளதா?

JAYABHARATHI DURAI

Signed by
Digitally signed by JAYABHARATHI DURAI
Date: 2026.07.23 19:07:42 +0530

(2) அவ்வாறு நிரூபிக்கப்பட்டிருந்தால் எதிரிக்கு வழங்கப்படும் தண்டனை என்ன?

8. <u>விவாதம், தீர்வு மற்றும் காரணம்:</u>

இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன. சாட்சி, சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

**9.** இவ்வழக்கானது குடும்ப வன்முறையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டம் 2005 பிரிவு 12-ல் D.VC NO.8/2024 என்ற எண்ணில் மனுதாக்கல் செய்து, மேற்படி வழக்கு நிலுவையில் இருந்து வரும்போதே புகார்தாரர் இடைக்கால ஜீவனாம்சம் கேட்டு Crl.MP.No.3671/2024 என்ற எண்ணில் மனு தாக்கல் செய்யப்பட்டு கடந்த 28.08.2023 ஆம் தேதி மேற்படி மனு நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டு புகார்தாரருக்கும், மைனர் குழந்தைகளுக்கும் மாதம் ரூ.5,000/- மாதாந்திர ஜீவனாம்சம் செலுத்த வேண்டுமென்று உத்தரவிடப்பட்டதாகவும் அதன்படி, 22.02.2024-ம் தேதி முதல் 21.09.2025-ம் தேதி வரையிலான 17 மாதங்களுக்கு இடைக்கால ஜீவனாம்சம் தராததால் எதிரி மீது இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. குடும்ப வன்முறையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டம் 2005-ன் கீழான ஆணையை ஒருவர் மீறும் போது அவர் மீது குடும்ப வன்முறையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டம் 2005-த்தின் பிரிவு 31-ன் கீழ் தண்டிக்கப்பட வேண்டும்.

**10.** குடும்ப வன்முறையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டம் 2005-ன் நோக்கமானது பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு பயனுள்ள மற்றும் நடைமுறையில் செயல்படுத்தக்கூடிய நிவாரணங்களை வழங்குவதற்கு பிரிவு 31-ன் கீழ் பாதுகாப்பு உத்தரவை மீறுவது குற்றமாக அறிவிக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையானது Maria Ravi Sahaya Raj v Sawariammal (Crl.O.P.MD.No.12942 of 2015. நாள் 13.11.2019 ) என்ற வழக்கில் , குடும்ப வன்முறைச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட உத்தரவுகளை மீறுவது குறித்து விரிவாக பரிசீலித்துள்ளது. நீதிமன்றம் குடும்ப வன்முறை விதிகள், 2006-ன் Rule 15(7)-ஐ குறிப்பிட்டு இந்த சட்டத்தின் கீழ் நீதிமன்றம் வழங்கும் உத்தரவுகளை அமல்படுத்துவதற்கு எதிராக ஏற்படுத்தப்படும் எந்தவித எதிர்ப்பும் அல்லது மீறலும், பாதுகாப்பு உத்தரவு மீறலாகக் கருதப்படலாம் (Breach of Protection Order) என்று எடுத்துக்காட்டியுள்ளது. எனவே, மேற்படி முன் தீர்ப்பில் சொல்லப்பட்டுள்ளது போல் இவ்வழக்கிலும் இடைக்கால ஜீவனாம்சத்தை கொடுக்க தவறியதன் மூலம் எதிரி பாதுகாப்பு ஆணையை மீறியதாக கருதப்படுகிறது.

**11.** இந்த வழக்கில் நீதிமன்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டதை எதிர்மனுதாரர்/எதிரி மறுக்கவில்லை. இடைக்கால ஜீவனாம்ச தொகையாக ரூ.5,000/- புகார்தாரருக்கும் அவரது மைனர் குழந்தைக்கும் செலுத்தச் சொல்லி இந்நீதிமன்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்ட தேதியான 09.03.2026-ல் இருந்து தற்போது வரை ரூ.30,000/- மட்டுமே ஜீவனாம்சமாக செலுத்தியுள்ளார் என்பது வழக்கு ஆவணங்கள் மூலம் தெரியவருகிறது. மேலும், மீதம் ரூ.55,000/-த்தை செலுத்தவில்லை என்பதும் தெரியவருகிறது. மேலும், எதிரி தரப்பில் இவ்வழக்கில் சான்றாவணமாக 5 ஆவணங்களை தாக்கல் செய்துள்ளார். எ.சா.ஆ.1 ஆக 1-வது எதிரியின் வருமான சான்றிதழ் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதில் அவர் மனுதாரரையும் சேர்த்து ரூ.6,000/- வருமானம் என்று குறிப்பிட்டு சான்றிதழ் பெற்றுள்ளார். மேற்படி வருமான சான்றிதழ் குறித்து குறுக்கு விசாரணை செய்தபோது எதிரி

> " எ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள வருமான சான்றிதழில் எனது வருமானமும், மனுதாரரின் வருமானமும் நான் கொடுத்த தகவலின் அடிப்படையில்தான் கொடுக்கப்பட்டதா ? என்றால், எனது வருமானம் நான் கொடுத்த தகவலின் அடிப்படையில் கொடுக்கப்பட்டது. மனுதாரரின் வருமானம் அவர் பள்ளியில் வேலை பார்த்த ஆவணங்களை நான் கேட்டதன் அடிப்படையில் கொடுக்கப்பட்டது. "

என்று சொல்லியுள்ளார்.

**12.** எனவே, மேற்படி வருமான சான்றிதழ் எதிரியால் குறிப்பிட்ட விபரங்களை கொடுத்து பெறப்பட்டுள்ளது என்பது தெரியவருகிறது. வருமானச் சான்றிதழ் என்பது அரசால் வருமானம் குறித்து உத்தேசமாக வழங்கப்படும் வருமானத்தை குறித்த சான்றிதழ்தானே தவிர அது வருமானத்தை உண்மையாக பிரதிபலிக்கும் அறுதியான ஆவணம் கிடையாது. எனவே, மேற்படி வருமான சான்றிதழ் மூலம் எதிரி மாதம் ரூ.6,000/-மட்டும்தான் வருமானமாக பெறுகிறார் என்று உறுதியாக எடுத்துக்கொள்ள முடியாது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**13.** இவ்வழக்கில் எதிரி அனைத்து நேரங்களிலும் தான் பணத்தினை செலுத்த தயாராக இருப்பதாக சொல்லியிருந்தாலும், அதே நேரத்தில் மனுதாரர் வேலைக்குச் சென்று சம்பாதித்து வருவதாகவும், எனவே, மனுதாரருக்கு ஜீவனாம்சம் வழங்கவேண்டியது இல்லை என்றும், பல்வேறு உயர் நீதிமன்ற மற்றும் உச்ச நீதிமன்ற

Signed by
JAYABHARATHI DURAI
Digitally signed by JAYABHARATHI DURAI
Date: 2026.07.23 19:07:53 +0530

தீர்ப்புகளில் மேற்படி சொல்லப்பட்டுள்ளது என்றும், அதற்கு ஆதரவாக மாண்புமிகு உச்ச நீதிமன்ற முன் தீர்ப்பான SLP (Crl) 10398/2024, Vijayakumar Vs Harsh Lata Agarwal. Rajesh Vs Neha (2021) 2 SCC 324. Damanreet Karur Vs Indermet Juneja & Anothers 2012 (4) JCC 2375, D.Balakrishnan Vs the Nill (Madras HC), Padmja Sharma Vs Ratan Lal Sharma (Supreme Court), Sanjay Bhardwaj Vs State of UP (Supreme Court) ஆகிய முன் தீர்ப்புகளை மேற்கோள் காட்டியுள்ளார்.

**14.** கணவன் – மனைவி சமமாக சம்பாதிக்கும் நேரத்தில் ஜீவனாம்சம் வழங்க தேவையில்லை என்றும், எதிர்மனுதாரர் நிரந்தர வேலை கிடைத்தவுடன் அதிகமாக ஜீவனாம்சம் தர தயாராக இருப்பதாக சொல்லியுள்ளார். எதிரியின் கூற்றுப்படி புகார்தாரரும், எதிரியும் ரூ.6,000/– சமமாக சம்பாதிக்கும் நேர்வில் எதிரி ஜீவனாம்ச தொகை தர தேவையில்லை என்று தீர்மானிக்கும் பட்சத்தில் எதிரிக்கும், மனுதாரர் / புகார்தாரருக்கும் பிறந்த மைனர் குழந்தையை எப்படி பராமரிப்பது என்றும் கேள்வி எழுகிறது.

**15.** எனவே, எதிரி வேண்டும் என்றே மனுதாரர் வேலைக்கு சென்று வருமானம் ஈட்டி வருகிறார் என்பதால் அவருக்கு ஜீவனாம்சம் தொகை தர மறுத்து வருகிறார் என்பது தெரிகிறது. இடைக்கால ஜீவனாம்சம் என்பது வழக்கு நடைபெற்று முடியும் வரை அந்தப் பெண்ணையும் குழந்தையையும் பராமரித்து வர வழங்கப்படும் தொகையாகும். இவ்வழக்கில் ஏற்கனவே முதல் நோக்கு கொண்டு எதிரி தான் நிரந்தர வேலையில் இல்லை என்றும், சொன்னதை கருத்தில் கொண்டும் குறைந்த பட்ச தொகையாக மனுதாரருக்கும் அவரது குழந்தைக்கும் சேர்த்தே ரூ.5,000/– மட்டுமே கொடுக்க உத்தரவிட்டுள்ளது. ஆனால், எதிரி தனது மாத வருமானம் ரூ.6,000/– என்று கூறியுள்ளார். மேற்படி தொகையானது குறைந்த பட்ச வருமான தொகை அளவிற்கு கூட இல்லை. உண்மையில் மேற்படி சொற்ப வருமானம் பெறும் ஒருவர் தனது பெற்றோர்களையும் கவனித்துக் கொண்டு வெளி மாநிலத்தில் கல்லூரி படிப்பும் படிக்க முடியும் என்பது குறித்து ஐயம் எழுகிறது.

**16.** இந்நீதிமன்றம் இடைக்கால ஜீவனாம்சமாக குறைந்த பட்ச தொகையாக மாதம் ரூ.5,000/– செலுத்த உத்தரவிட்ட பிறகும் எதிரி பகுதி தொகையாக ரூ.32,500/– செலுத்திவிட்டு மீத தொகையை செலுத்த மறுப்பது ஏற்றுக் கொள்ளதக்கதல்ல என்றும், வேண்டும் என்றே மனுதாரருக்கு இடைக்கால ஜீவனாம்சம் கொடுக்க தவறி வருகிறார் என்றும் இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது. அதே நேரத்தில் செலுத்திய பகுதி

Signed by
JAYABHARATHI DURAI
Digitally signed by JAYABHARATHI DURAI
Date: 2026.07.23 19:07:59 +0530

தொகையை பொறுத்து அவருக்கு அளிக்க வேண்டிய தண்டனை காலத்தை கணக்கிடும்போது கருத்தில் கொள்ளவும் இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**17.** எனவே புகார்தாரர் தரப்பில் நிறைவேற்றல் மனுவில் கூறப்பட்டுள்ளதை ஒத்துரைக்கும் விதமாக புகார்தாரர் தனது நீதிமன்ற சாட்சியத்திலும் மேற்படி எதிர்மனுதாரர்/எதிரி ஜீவனாம்ச நிலுவை தொகை, செலுத்தவில்லை என்பது பற்றி சாட்சியமளித்துள்ளதன் மூலம் மனுதாரர் தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்/எதிரி தரப்பில் முழுமையாக நிலுவைத் தொகை செலுத்தவில்லை என்பதற்கு சொல்லப்பட்டுள்ள காரணம் ஏற்கத்தகுந்ததாக இல்லை.

**18.** எனவே, மேலே கூறிய விவாதங்களின்படி எதிரி முழுமையாக தொகை செலுத்தாமல் இருப்பதற்கு எந்தவொரு தகுந்த காரணமும் முன்னிலைப்படுத்தவில்லை என்றும், எதிர்மனுதாரர்/எதிரி மீதான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும். எனவே எதிரி பிரிவு 31 குடும்ப வன்முறையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டத்தின் கீழ் குற்றவாளி என இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது. முடிவாக, எதிரிக்கு பிரிவு 31 குடும்ப வன்முறையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டம் 2005–ன் கீழ் 5 மாதம் மெய்காவல் சிறை தண்டனையும், ரூ.2,000/– அபராதமும், அபராத தொகை செலுத்த தவறினால் மேலும், 1 மாதம் மெய்காவல் சிறை தண்டனையும் வழங்கி 278(2) of BNSS பிரிவின் கீழ் உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது. அபராதத் தொகையை புகார்தாரருக்கு 395(3) of BNSS பிரிவின் படி இழப்பீடாக வழங்கவும் உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை திருத்தம் செய்யப்பட் டு 2026–ம் ஆண்டு ஜுலை மாதம் 23–ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது .

JAYABHARATHI DURAI

Signed by
Digitally signed by JAYABHARATHI DURAI
Date: 2026.07.23 19:08:06 +0530

நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகளிர் நிதிமன்றம்
தேனி.

**<u>மனுதாரர் தரப்பு சாட்சி</u>**

| மனுதாரர் தரப்பு சாட்சி | பெயர் | விபரம் |
|---|---|---|
| ம.சா.1 | பிரபா | 1-ம் மனுதாரர் |

**<u>மனுதாரர் தரப்பு சான்றாவணம்</u>**

| மனுதாரர் தரப்பு சான்றாவணம் | சான்றாவணம் விபரம் | சான்றாவணம் யாரால் குறியீடு செய்யப்பட்டது. |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | 23.07.2025-ம் தேதிய Crl.MP.No.3671/2024 மனுவின் உத்தரவு - உண்மை நகல் | ம.சா.1 |

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி</u>**

| எதிர் மனுதாரர் தரப்பு சாட்சி | பெயர் | விபரம் |
|---|---|---|
| எ.ம.சா.1 | அஜித்குமார் | எதிர்மனுதாரர் |

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u>**

| எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் | சான்றாவணங்கள் விபரம் | சான்றாவணங்கள் யாரால் குறியீடு செய்யப்பட்டது. |
|---|---|---|
| எ.ம.சா.ஆ.1 | எதிர்மனுதாரரின் வருமானச் சான்றிதழ் - online copy | எ.ம.சா.1 |
| எ.ம.சா.ஆ.2 | Post Office savings account copy - நகல் | எ.ம.சா.1 |
| எ.ம.சா.ஆ.3 | மனுதாரருக்கு பணம் செலுத்திய விபரம் - நகல் | எ.ம.சா.1 |
| எ.ம.சா.ஆ.4 | மனுதாரர் பள்ளியில் வேலை பார்த்து மாதம் ரூ.5,000/- பெறுகிறார் என்பதற்கான சான்று - நகல் - தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பெறப்பட்டது. | எ.ம.சா.1 |

Signed by
JAYABHARATHI DURAI
Digitally signed by JAYABHARATHI DURAI
Date: 2026.07.23 19:08:13 +0530

| | | |
|---|---|---|
| எ.ம.சா.ஆ.5 | எதிர்மனுதாரரின் தாயார் மருத்துவ சிகிச்சை பெற்றதற்கான ஆவணங்கள் – நகல் | எ.ம.சா.1 |

JAYABHARATHI DURAI
Signed by
Digitally signed by JAYABHARATHI DURAI
Date: 2026.07.23 19:08:21 +0530

**நீதித்துறை நடுவர்,**
**கூடுதல் மகளிர் நீதிமன்றம்**
**தேனி.**